கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**OS.No. 440/2024**

திரு. சண்முகம் (D.W –1) **14.11.2025**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் டைலராக வேலை செய்து வருகிறேன். 2ம் பிரதிவாதி என் மனைவி என்றால் சரி. அவர் என்ன வேலை பார்த்து வருகிறார் என்றால் டைலராக உள்ளார். எங்களுக்கு வார வருமானம் ரூ. 5 ஆயிரம் முதல் 10 ஆயிரம் வருமா என்றால் ரூ. 4500/– வரும். வருமான வரி செலுத்தி வருகிறேனா என்றால் இல்லை. நான் வியாபாரம் செய்யவில்லை. என்னுடைய வருட வருமானம் ரூ. 2,50,000/– வரும் என்றால் தவறு அதற்குள் வரும். என்னுடைய சொத்து என்னுடைய வருமானத்தில் இருந்து பெற்றது என்றால் தவறு. என் பெற்றோர் வாங்கி கொடுத்தார்கள்.

2. வா.சா.ஆ. 6 சொத்தை வைத்து நிறைய கடன் பெற்றுள்ளேன் என்றால் தவறு. நிறைய நபர்களிடம் வா.சா.ஆ.6 ஐ வைத்து கடன் பெற்றுள்ளேன் என்றால் தவறு. ஒரு நபரிடம் கடன் பெற்றேன். ஒரு நபரிடம் மட்டும் கடன் வாங்கினேனா அல்லது வாதியிடமும் கடன் பெற்றேனா என்றால் வாதியிடம் நான் ஏற்கனவே பெற்ற கடனை அடைப்பதற்காக கடன் பெற்றேன். சாட்சி தன்னிச்சையாக முன்வந்து ரூ. 75,000/– கடன் பெற்றதாக சொன்னார்.

3. பி.வா.சா.ஆ.1 கடன் எதற்காக வாங்கப்பட்டது என்றால் வீடு கட்டுவதற்காக வாங்கினேன். அந்த கடன் பெறும் போது வா.சா.ஆ.6 ஐ பொறுத்து வடிவேலிடம் பி.வா.சா.ஆ.1ன் படி கடன் பெற்றீர்கள் என்றால் சரி. வடிவேலிடம் கடன் தொகை திருப்பி செலுத்திய பிறகு தான் வா.சா.ஆ.6 அசல் ஆவணத்தை திரும்ப பெற்றேன் என்றால் சரி. வடிவேலிடம் வாங்கிய கடன் தேதி என்னவென்றால் 2016–2017 ஆண்டு ஆகும். பி.வா.சா.ஆ.1ன் படி 16.11.2016 ஆம் தேதி கடன் பெற்றீள்ளீர்கள் என்றால் சரி. பி.வா.சா.ஆ. 1ன் படி பெற்ற கடன் எவ்வளவு நாட்களுக்குள் திருப்பி செலுத்துவதாக சொன்னேன் என்றால் ஒரு வருடத்திற்குள் கடனை திருப்பி செலுத்துவதாக சொல்லியிருந்தேன். அவ்வாறு தான் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. அந்த கடனை எப்போது ரத்து செய்தீர்கள் என்றால் 28.07.2017ல் ரத்து

செய்தேன். கடன் பெற்று பி.வா.சா.ஆ.2ன் படி 8 மாதத்தில் கடனை திருப்பி செலுத்தியுள்ளேன் என்றால் ஒரு வருடத்தில் திருப்பி செலுத்தினேன்.

4. கடன் தொகையை முன்னதாகவே திருப்பி செலுத்திவிட்டேன் என்றால் சரி. போதிய வசதி இருந்த காரணத்தால் பி.வா.சா.ஆ.1 கடனை குறிப்பிட்ட காலத்திற்கு முன்பே திருப்பி செலுத்தியுள்ளேன் என்றால் தவறு. பி.வா.சா.ஆ.1 கடனை என்னுடைய வருமானத்தை வைத்துத்தான் திருப்பி செலுத்தியுள்ளேன் என்றால் தவறு. பி.வா.சா.ஆ.2 ஏற்பட்ட தேதியில் எப்போது சார்பதிவளார் அலுவலகத்திற்கு சென்றேன் என்றால் காலை 10 மணிக்கு சென்றேன்.

5. எத்தனை மணிக்கு கடன் ரத்து செய்யப்பட்டது என்றால் 11 மணிக்கு ரத்து செய்யப்பட்டது. ரத்து செய்யப்பட்ட பிறகு அசல் ஆவணத்தை பெற்றுக்கொண்டேன் என்றால் சரி. 11 மணிக்கு பி.வா.சா.ஆ 2ன் படி கடனை அடைத்த பிறகு என்னுடைய சொத்தின் அசல் ஆவணத்தை பெற்றதால் அன்றைய தினம் காலை 9 மணிக்கு வா.சா.ஆ.6 ஆவணத்தை கொடுத்து கடன் பெற்றதாக சொல்வது பொய் என்றால் தவறு. வா.சா.ஆ.6ஐ ஒரு நாள் முன்பே பெற்றுக்கொண்டேன். இந்த விவரங்கள் கடன் பத்திரத்தில் சொல்லவில்லை. வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

6. என்னுடைய குறுக்கு விசாரணை சாட்சியம் முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்றால் சரியல்ல. எந்தத் தேதியில் வாதியிடம் பெற்ற கடனை திருப்பி செலுத்துவதாக சொன்னேன் என்றால் தேதி ஞாபகமில்லை. 2023 ஆம் வருடம் கேட்டேன். 2024ல் சென்று கேட்டதாக சொல்லியிருந்தால் அது பொய் என்றால் ஞாபகமில்லை. வாதியிடம் வா.சா.ஆ.6 ஆவணத்தை கடன் செலுத்திய பிறகு கேட்ட போது வா.சா.ஆ.6 ஆவணம் தொலைந்து விட்டது என்பதற்கு புகார் கொடுத்தீர்களா என்றால் கொடுக்கவில்லை. தேடி பார்த்து தருவதாக வாதி சொன்னார். எத்தனை நாட்களில் தேடி தருவதாக வாதி சொன்னார் என்றால் 10 நாட்களில் தருவதாக சொன்னார். அதன் பிறகு பல மாதங்கள் ஆன பிறகும் எழுத்து பூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்றால் சரி.

7. வாதியிடம் சென்று கடனை முடித்து அசல் ஆவணத்தை திருப்பி கேட்கவில்லை, அசல் ஆவணம் தொலைந்து போனதாக அவர் சொல்லவில்லை, வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. வாதியிடம் அடமானக்கடன் மூலம் 10.08.2023 ஆம் தேதி கடன் பெற்றுக்கொண்டு

கடனுறுதிச்சீட்டு எழுதி கொடுத்து வா.சா.ஆ. 6 ஆவணத்தின் அசலை கொடுத்தேன் என்றால் தவறு. என்னுடைய முதல்விசாரணை பத்தி 7ல் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் சரியானவை என்றால் சரிதான். பத்தி 7ல் 01.02.2023 ஆம் தேதி கடன் தொகையை தயாராக வைத்திருந்ததாக சொல்லிவிட்டு அதே பத்தியில் 08.09.2024 ஆம் தேதி சென்று கடன் திருப்பி கொடுத்தாக சொல்வது முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்றால் சரியல்ல.

8. வாதியிடம் பெற்ற கடனை திருப்பி கொடுப்பதாக சொன்ன தேதியில் அந்த தொகை கையிருப்பில் இருந்தது என்பதற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. கடன் தொகையை திருப்பி செலுத்தி வா.சா.ஆ.6 ஆவணத்தை திருப்பி கொடுங்கள் என்று எழுத்து பூர்வமாக கேட்டேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.1, வா.சா.ஆ.6 ஆவணங்களை வைத்து கடன் பெற்று திருப்பி செலுத்தாததால்தான் வாதி தாவா தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

9. வாதியிடம் பெற்ற கடனை திருப்பி கொடுக்கக்கூடாது என்பதற்காக முதல் விசாரணையில் பொய்யான சாட்சியம் அளித்து ஆவணம் தொலைந்து போனதாக வாதி சொன்னதாக வழக்கிற்காக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வாதியிடம் கடன் பெற்ற போது வா.சா.ஆ.1 ஆவணத்தை ஏற்படுத்தி கொடுத்து விட்டு தற்போது அதை வழக்கிற்காக மறுக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா வாதி கோரியபடி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN Digitally signed by K R KANNAN Date: 2025.11.14 17:49:23 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.